தினமணி

தேங்காய் கொள்முதல் விலை சரிவு: தென்னை விவசாயிகள் கவலை

First Published : 25 Jun 2012 09:31:30 AM IST

தேனி, ஜூன் 25: தேனி மாவட்டத்தில் தேங்காய் கொள்முதல் விலை சரிந்துள்ளதால், உற்பத்திச் செலவுக்கு கட்டுப்படியாகாத நிலையில் தென்னை விவசாயிகள் நஷ்டத்தில் அவதிப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 18 ஆயிரத்து 100 ஏக்கர் பரப்பளவில், தென்னை விவசாயம் நடைபெற்று வருகிறது. பலன்தரக் கூடிய நிலையில் மொத்தம் 31 லட்சத்து 80 ஆயிரம் தென்னை மரங்கள் உள்ளன. பெரியகுளம், உத்தமபாளையம், கம்பம், போடி, கோம்பை, மயிலாடும்பாறை ஆகிய இடங்களில் அதிக அளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தேங்காய் உற்பத்தியில் தமிழகத்தில் தேனி மாவட்டம் முக்கிய இடம் வகிக்கிறது. இங்கு உற்பத்தியாகும் தேங்காயில், 7,650 தேங்காய்க்கு ஒரு டன் கொப்பரையும், அதன் மூலம் 475 கிலோ எண்ணெயும் கிடைப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

விவசாயிகளிடமிருந்து கடந்த சீசனை விட, குறைவாக தற்போது 100 தேங்காய் ரூ. 500 முதல் ரூ. 600 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. தென்னையில் உற்பத்திச் செலவு ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துவரும் நிலையில், விலை சரிந்துள்ளதால் விவசாயிகள் பல்வேறு வகையில் சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன், அரசு மூலம் கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்தது தொடர்பாக ஏற்பட்ட குளறுபடிகளால், தற்போது வரை மாவட்டத்தில் தேங்காய் கொள்முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனால், குறைந்தபட்ச விலை நிர்ணயமின்றி வியாபாரிகள் நிர்ணயிக்கும் விலைக்கு தேங்காய்களை விற்பனை செய்து வருவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

சிக்கலில் விவசாயிகள்: உரம் விலை உயர்வு, வேலையாள் பற்றாக்குறை மற்றும் சம்பள உயர்வு, மின் தட்டுப்பாடு ஆகிய பிரச்னைகளால், ஒவ்வொரு ஆண்டும் உற்பத்திச் செலவு அதிகரித்து வருவதாக விவசாயிகள் கூறுகின்றனர். கொள்முதலின் போது 100 தேங்காய்க்கு 10 முதல் 15 தேங்காய்கள் லாபக் காய்களாக கழிவு செய்யப்படுகின்றன.

தேங்காய் விலை சரிந்துள்ள நிலையில், வெட்டுக் கூலி மற்றும் சுமை கூலிக்கு கட்டுப்படியாகாமல் 40 நாள்களுக்கு ஒரு தேங்காய் வெட்டு என்ற காலக்கெடுவை மாற்றி, பெரும்பாலானோர்

தற்போது 80 நாள்களுக்கு ஒருமுறை தேங்காய் வெட்டும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். இதனால் மரத்தில் இருந்து காய்கள் உதிர்ந்து, மேலும் நஷ்டம் ஏற்படுகிறது. உற்பத்திச் செலவை சமாளிக்க வியாபாரிகளிடம் முன்பணம் பெற்று, அவர்கள் நிர்ணயிக்கும் விலைக்கு தேங்காய்களை விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

தென்னை விவசாயிகள் நலன் கருதி, அரசு சார்பில் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்து, கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். இதுகுறித்து, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் கண்ணன் கூறியது: கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையங்கள் அமைக்கவும், உரித்த தேங்காய்க்கு ஒரு கிலோவுக்கு ரூ. 15-ம், கொப்பரை தேங்காய் கிலோ ஒன்றுக்கு ரூ.71-ம் நிர்ணயம் செய்யவும், தென்னை அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்தவும் மாவட்ட நிர்வாகத்தை வலியுறுத்தி தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்க மாவட்டக் குழு சார்பில் விரைவில் போராட்டம் நடத்த உள்ளோம் என்றார்.

"தென்னை வாடல் நோய்க்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை'

First Published : 24 Jun 2012 01:16:25 PM IST

நாகர்கோவில், ஜூன் 23:÷ கேரள வாடல் நோயால் பாதிக்கப்பட்ட தென்னைகளுக்கு தலா ரூ. 1,000 இழப்பீடு வழங்கப்படும் என, நாகர்கோவிலில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

÷ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் எஸ். நாகராஜன் தலைமையில் நடைபெற்றது.

÷பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) போஸ்லின் வின்செண்ட் சாம் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் விவசாயி ராஜாராம் பேசும்போது, ராஜாக்கமங்கலம் பகுதியில் கேரள வாடல் நோயால் தென்னைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதிகாரிகள் யாரும் அவற்றைப் பார்வையிடவில்லை என்றார்.÷மேலும், வாடல் நோய் பாதித்த தென்னையின் குருத்துப் பகுதியை எடுத்து வந்திருந்த அவர், அதனை அதிகாரிகளிடம் காட்டினார்.÷இதற்குப் பதிலளித்த அதிகாரிகள், வாடல் நோயால் பாதிக்கப்பட்ட 8 ஆயிரம் தென்னைகளுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்ததும், மரத்துக்கு ரூ. 1,000 வீதம் இழப்பீடு கிடைக்கும் என்றனர்.÷விவசாயி பத்மதாஸ் பேசுகையில், மாம்பழத்துறை அணையிலிருந்து இரட்டைக்கரை கால்வாய்க்கு தண்ணீர் திறக்க வேண்டும். சேதமடைந்துவரும் வில்லுக்குறி பாலத்தில் உடனடியாக பராமரிப்புப் பணி தொடங்க வேண்டும் என்றார்.

 விவசாயி தேவதாஸ் பேசுகையில், நுண்ணீர் பாசனத் திட்டத்தில் மாவட்டத்தில் 150 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. இதுவரை பணி நடைபெறவில்லை. புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை என்றார்.

 விவாசாயி தங்கப்பன் பேசுகையில், கேரளத்தைப்போல தமிழகத்திலும் உரித்த தேங்காய்களைக் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

 பாசனத் துறைத் தலைவர் வின்ஸ் ஆன்டோ கூறுகையில், குலசேகரம், திருவட்டார் பகுதிகளில் உள்ள பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான இடங்களில் உள்ள விலை உயர்ந்த மரங்கள் வெட்டிக் கடத்தப்படுகின்றன. இதுகுறித்து பலமுறை புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றார்.

 இதற்கு பதிலளித்த அதிகாரிகள், இதுதொடர்பாக துறைவாரியாக விசாரணை நடைபெறுவதாகக் கூறினர். தோவாளை கால்வாயில் கடைவரம்புப் பகுதிகளுக்கு தண்ணீர் வராததால் தென்னை, வாழைகள் பாதிக்கப்படுவதாக அப் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

 அப்போது, அணை திறக்கப்பட்டு அனைத்துக் கால்வாய்களுக்கும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாக பொதுப்பணித் துறையினர் பதிலளித்தனர்.

## ஆத்மா திட்டத்தில் பணி: நாளை நேர்முகத் தேர்வு

First Published : 24 Jun 2012 03:15:39 PM IST

வேலூர், ஜூன் 23: வேலூர் மாவட்டத்தில் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை (ஆத்மா) திட்டத்தின் கீழ் தாற்காலிக ஒப்பந்த அடிப்படையில் வட்டார அளவில் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட வுள்ளனர்.

இதுகுறித்து ஆட்சியரின் செய்திக் குறிப்பு:

 ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரியின் பணியாளர்கள் இட அமர்த்தல் பிரிவின் கீழ் வட்டார அளவில் வேளாண் இளங்கலை, முதுகலை மற்றும் பட்டயப் படிப்பு முடித்த பணியாளர்களைத் தேர்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி 17 தொழில்நுட்ப வல்லுநர்கள் தாற்காலிக அடிப்படையில் நேர்முகத் தேர்வு வாயிலாக தேர்வு செய்யப்படவுள்ளனர்.

 நேர்முகத் தேர்வு ஜூன் 25-ம் தேதி வேலூர், தொரப்பாடி, சிவராமபுரத்தில் உள்ள வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் (தந்தை பெரியார் பாலிடெக்னிக் எதிரில்) நடைபெறும். தகுதியுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பம் மற்றும் சான்றிதழ்களுடன் குறிப்பிட்ட நாளில் காலை 9 மணியளவில் நேர்முகத் தேர்வில் பங்கேற்கலாம்.

வேளாண் துறையில் அரசின் கூடுதல் கவனம்

First Published : 24 Jun 2012 01:32:41 AM IST

இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் பெண்ணுக்கு சேலை வழங்குகிறார் முதல்வர் ரங்கசாமி.

புதுச்சேரி மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்தில் பங்கெடுக்கும் வகையில் பெரும்பாலான பணிகள் சேவை மற்றும் தொழிற்சாலைகளுக்குச் சென்றுவிட்டன.

இந்த நிலையில், வேளாண்துறையில் கவனம் செலுத்தவும், வளர்ச்சியை ஏற்படுத்தவும் பல்வேறு திட்டங்களை 12-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு முன்வைத்திருக்கிறது. நிலம் மற்றும் தண்ணீர் பற்றாக்குறை நிலவும் நேரத்தில், குறைந்த நீரையும் நிலத்தையும் கொண்டு அதிக விளைச்சல் பெறுவதற்கான நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தியுள்ளது.

வருவாய் கிடைக்கக்கூடிய பயிர்களான காய்கறிகள், மலர்கள் போன்றவற்றை மாற்றுப் பயிராக ஊக்குவிக்கவும் திட்டமிட்டுள்ளது. ஏற்கெனவே இருக்கும் மனிதவளத்தைக் கொண்டு, அவைகளின் திறனை மேம்படுத்தவும், உற்பத்தியை ஊக்குவிக்கவும் தேவையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இயற்கை விவசாயம், ஒப்பந்த விவசாயம், கிசான் அட்டைகள் வழங்குவது போன்ற பணிகளைத் தனியார் உதவியோடு ஊக்குவிக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இயற்கை விவசாய சந்தையை அமைப்பதன் மூலம் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கவும், உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்யவும், இயற்கை விளைபொருள் விற்பனை மையம் அமைக்கவும் முடிவெடுத்துள்ளது. உற்பத்திக்குப் பிறகான இழப்புகளைக் குறைக்க, சேமிப்புக் கிடங்குகளையும், குளிர்பதன வசதிகளை செய்துத் தரவும், கூடுதல் உழவர் சந்தைகள் அமைக்கவும், விற்பனை மையங்கள் அமைக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

முட்டைக் கொள்முதல் விலை மேலும் உயர்வு

First Published : 24 Jun 2012 02:00:38 AM IST



நாமக்கல், ஜூன் 23: நாமக்கல்லில் முட்டைக் கொள்முதல் விலை சனிக்கிழமை மேலும் 2 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.3.26 என நிர்ணயிக்கப்பட்டது.
மேற்கு கடற்கரை பகுதியில் நிலவும் மீன் பிடிக்கத் தடை, தென்மேற்குப் பருவமழை, காய்கறி விலையேற்றம் ஆகியவற்றின் காரணமாக கேரளத்தில் முட்டை நுகர்வு அதிகரித்துள்ளது. இதனால், தினமும் ஒரு கோடி முட்டைகள் கேரளத்துக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இதற்கிடையே பள்ளிகள் திறக்கப்பட்டு தினமும் சத்துணவுத் திட்டத்துக்காக 45 லட்சம் முட்டைகள் கொள்முதல் செய்யப்படுவதாலும், வங்கதேசத்தில் முட்டை இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டிருப்பதாலும் முட்டைகளுக்கான தேவைப்பாடு வெகுவாக உயர்ந்துள்ளது.இதைத் தொடர்ந்து, ஜூன் மாதத் தொடக்கம் முதலே வேகமாக உயர்ந்து வந்த முட்டைக் கொள்முதல் விலை கடந்த வாரம் திங்கள்கிழமை (ஜூன் 18) ரூ.3.22 என நிர்ணயிக்கப்பட்டது. நாமக்கல் மண்டலத்தின் வரலாறு காணாத இந்த விலையேற்றத்தின் தொடர்ச்சியாக வியாழக்கிழமை மீண்டும் 2 பைசா உயர்த்தப்பட்டது. இந்த நிலையில், சனிக்கிழமை நடைபெற்ற நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முட்டைக் கொள்முதல் விலையை மேலும் 2 பைசா உயர்த்தப்பட்டு ரூ.3.26 என நிர்ணயிக்கப்பட்டது.
பிற மண்டலங்களில் நிலவும் முட்டைக் கொள்முதல் விலை
விவரம்:
சென்னை -ரூ.3.31, பெங்களூர் -ரூ. 3.22, மைசூர் -ரூ.3.22, ஹைதராபாத் -ரூ.3.01, மும்பை -ரூ.3.33, விஜயவாடா -ரூ.3.03, கொல்கத்தா -ரூ.3.50, பர்வாலா -ரூ.2.98, தில்லி -ரூ.3.08.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

### வரத்து குறைந்ததால். மிளகாய் வற்றல் விலை உயர்ந்தது

ஜூன் 25,2012,01:16

விருதுநகர்:விருதுநகர் மார்க்கெட்டில், மிளகாய் வற்றல் வரத்து குறைந்ததால் இதன் விலை, குவிண்டாலுக்கு, 300 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.விருதுநகர் மார்க்கெட்டில், சர்க்கரை மூட்டைக்கு 3,055 ரூபாய், பாமாயில் டின்னுக்கு 995 ரூபாய், கடலை எண்ணெய் 1,860 ரூபாய், சூரியகாந்தி எண்ணெய் 1,230 ரூபாய், ஒரு மூட்டை நிலக்கடலை பருப்பு 5,200 ரூபாய், கடலை புண்ணாக்கு 3,600 ரூபாயாக உள்ளது.



எண்ணெய் விலையில் மாற்றம் இல்லை.உளுந்து மூட்டை 3,500லிருந்து 3,600 ரூபாயாக உயர்ந்துள்ளது. இதேபோன்று உளுந்து 3,300ரூபாய், பொடி உளுந்து 3,200 ரூபாய், உளுந்தம் பருப்பு 5,400 ரூபாய், பர்மா உளுந்தம் பருப்பு 4,900 ரூபாய், துவரை 4,000 ரூபாய், பொடித் துவரை 3,800 ரூபாய் என்ற அளவில் உள்ளது.

மேலும் துவரம் பருப்பு 6,500 ரூபாய், பொடி துவரம் பருப்பு 5700, பாசிப்பயறு நாடு 5,400 ரூபாயிலிருந்து 5,700, லயன் பாசிப்பயறு 6,000 ரூபாய், பாசிப் பருப்பு 5,300 ரூபாய், பொடிப் பாசிப் பருப்பு 5,000 ரூபாய்,கொண்டைக் கடலை 5,300 ரூபாய், பொரி கடலை 3,910 ரூபாய், மைதா 2,480 ரூபாயாக உள்ளது.ரவை 2,280 ரூபாயிலிருந்து 2,460 ரூபாயாக குறைந்துள்ளது. பருப்பு விற்பனை மந்தமாக இருந்ததால், இதன் விலை நிலையாக உள்ளது. ஒரு குவிண்டால் சம்பா மிளகாய் வற்றல் 3,400 லிருந்து 3,700 ரூபாயாகவும் சோடை வற்றல் 1,200 லிருந்து, 1,400 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

## கோதுமை கொள்முதலில் புதிய சாதனை

ஜூன் 25,2012,01:03



புதுடில்லி:நடப்பு 2012-13ம் ஆண்டு சந்தைப்படுத்தும் பருவத்தில் (ஏப்ரல்-மார்ச்), இதுவரையிலுமாக, மத்திய அரசின் கோதுமை கொள்முதல் 35 சதவீதம் அதிகரித்து, 3.72 கோடி டன் என்ற சாதனை அளவை எட்டியுள்ளது. இது,கடந்த 2011-12ம் சந்தைப்படுத்தும் பருவத்தின் இதே காலத்தில், 2.75 கோடி டன்னாக இருந்தது.மத்திய அரசு, நடப்பு பருவத்தில், 3.20 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயித்திருந்தது. ஆனால், தற்போது,இந்த இலக்கையும் விஞ்சி, கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜூன் 22ம் தேதி வரையிலான காலத்தில், 3.72 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நடப்பு பருவத்தில், கோதுமை கொள்முதலில், பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களின் பங்களிப்பு முறையே 1.28 கோடி டன் மற்றும் 86.60 லட்சம் டன்னாக உள்ளது.இதுதவிர, மத்தியப் பிரதேசம் (84.90 லட்சம் டன்), உத்தரப் பிரதேசம் (45.40 லட்சம் டன்) ஆகிய மாநிலங்களிலிருந்தும் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.
சர்வதேச அளவில் கோதுமை உற்பத்தியில் சீனா முதலிடத்தில் உள்ளது. இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது. நடப்பு 2011-12ம் பயிர் பருவத்தில் (ஜூலை-ஜூன்), நாட்டின் கோதுமை உற்பத்தி 9.02 கோடி டன்னாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இதற்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டால் ஒன்றுக்கு 1,285 ரூபாய் என்ற அளவில் உள்ளது.

## மலை வாழை சாகுபடியில் சரிவு

ஜூன் 25,2012,01:02



கொடைக்கானல்:கொடைக்கானல் மலைப்பகுதியில் விளையும் மலை வாழை பழங்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகி வரும் நிலையில், குறைந்து வரும், வாழை சாகுபடியை காப்பாற்ற, அரசு முன் வரவேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.கொடைக்கானல், வடகவுஞ்சி, பெரும்பள்ளம், கோம்பைக்காடு பகுதியில் மானாவாரி பயிராக மலை வாழை அதிகளவில் விளைகிறது. இப்பழம், 15 நாட்கள் வரை கெடாமல் தாக்குபிடிக்கும் தன்மையுடையது.

பராமரிப்பு:மருத்துவ குணம் நிறைந்த, மலை வாழைப்பழத்திற்கு வெளிமார்க்கெட்டில் தேவை அதிகம் உள்ளது. உரம், தண்ணீர் வசதியின்மை, குறைந்த பராமரிப்பு என்பதால், விவசாயிகளும் ஆர்வமுடன் பயிரிட்டுள்ளனர்.மாதத்திற்கு ஒரு டன் வரை மலை வாழைப் பழங்கள் ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அரசின் நேரடி கொள்முதல் மையம் கொடைக்கானலில் இல்லை.இதனால், சிறு விவசாயிகள் சாலையோரம் வாரச் சந்தையை மட்டுமே நம்பியுள்ளனர். இதனால், விளைப்பொருளுக்கு உரிய தொகை கிடைக்காத நிலை உள்ளது.மேலும் யானைகள், காட்டெருமைகள் அடிக்கடி, வாழை தோப்புக்குள் புகுந்து சேதத்தை ஏற்படுத்துகின்றன. இதனால், ஆண்டுக்கு நூறு ஏக்கர்
சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது.

வன விலங்குகள்:விவசாயி நாசர் அலி கூறியதாவது:ஒரு சிப்பம் (400 காய்கள்) 2,000 ரூபாய் வரை விற்பனையாவதால், மகிழ்ச்சியாக உள்ளது. வன விலங்குகளின் தொந்தரவு அதிகம் உள்ளது. இதை தவிர்க்க, வனத் துறையினர் "சோலார்' வேலி அமைத்து தரவேண்டும். முடிக்கொத்து நோய் பாதிப்பை கட்டுப்படுத்த தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் உதவ வேண்டும். கொள்முதல் மையம், வாரச் சந்தைக்கென, நிரந்தர கட்டட வசதி செய்துகொடுத்தால், மலை வாழை சாகுபடி பரப்பு அதிகரித்து, விளைச்சல் மேலும் உயர வாய்ப்புள்ளது, என்றார்.

## பொருளாதார சுணக்க நிலையால் முந்திரி பயன்பாடு குறைந்தது

ஜூன் 25,2012,00:59



பொருளாதார சணக்க நிலையால் முந்திரி பயன்பாடு குறைந்தது

புதுடில்லி:உலகளவில், பொருளாதார வளர்ச்சி மந்தகதியில் உள்ளதால், முந்திரிக்கான தேவை வெகுவாக குறைந்துள்ளதாக, இத்துறை சார்ந்த வர்த்தகர்கள் தெரிவித்தனர்.ஐரோப்பிய நாடுகள் நிதிநெருக்கடியில் சிக்கியுள்ளதால், அங்கு முந்திரி பயன்பாடு குறைந்துள்ளது. மேலும், தற்போது காணப்படும் இடர்பாடான சூழலில், அந்நாடுகளுக்கு முந்திரியை ஏற்றுமதி செய்ய வர்த்தகர்கள் தயங்குகின்றனர்.

உள்நாட்டு கலவரம்:இது தவிர, மேற்காசிய நாடுகளின் ஸ்திரமற்ற அரசியல் காரணமாகவும், முந்திரி ஏற்றுமதி குறைந்துள்ளது. சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டு கலவரம், அணுஆயுத பிரச்னை காரணமாக ஈரான், மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடை போன்றவையும், முந்திரி ஏற்றுமதிக் குறைய வழி வகுத்துள்ளது. இந்த சந்தைகளின் இழப்பை ஈடுகட்டும் விதத்தில், அதிக அளவில் முந்திரியை இறக்குமதி செய்து வந்த சீனாவும், தற்போது இறக்குமதி அளவை குறைத்துக் கொண்டுள்ளது.ஆடம்பர உணவுப் பொருளாக கருதப்படும் முந்திரி, ஒரு நாடு பொருளாதார நெருக்கடியை, சந்திக்கும் போதெல்லாம் பாதிப்பிற்கு உள்ளாகிறது. மக்கள் சிக்கன நடவடிக்கையை மேற்கொள்ளும் போது, உணவுப் பொருட்கள் பிரிவில் முந்திரி பயன் பாட்டை குறைத்து கொள்கின்றனர்.
இதற்கு அதன் விலை உயர்வும் காரணமாகும். இதனால், ஐரோப்பிய வர்த்தகர்கள், சிறுக, சிறுக, @தவைக்கு ஏற்ப முந்திரியை இறக்குமதி செய்து வருகின்றனர். அமெரிக்காவின் முந்திரி தேவை, நிலையாக உள்ளபோதிலும், பெரிய அளவில் மொத்தமாக எந்த வர்த்தகரும் வாங்கவில்லை என்று, உணவுப் பொருட்கள் ஏற்றுமதியில் ஈடுபட்டு வரும் வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.
வீழ்ச்சி:சென்ற 2011ம் ஆண்டு, முந்திரியின் வரத்து குறைந்து, விலை உச்சத்திற்கு சென்றது. டபிள்யூ 320 ரக முந்திரி,ஒரு பவுண்டு 4.50 டாலராக உயர்ந்தது. இதனால், அதன் சந்தை பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவிற்கு சரிவடைந்தது. ஆனால், நடப்பாண்டு முந்திரி பயன்பாடு குறைந்துள்ளதால், அதன் விலை வீழ்ச்சியும் கண்டுள்ளது.
டபிள்யூ 320 ரக முந்திரியின் விலை, 3.30 முதல், 3.50 டாலராக குறைந்துள்ளது. அமெரிக்காவை பொருத்தவரை, ஆண்டுக்கு 2-3 சதவீத வளர்ச்சி பெற்று வந்த முந்திரி பயன்பாடு, சென்ற ஆண்டு 11 சதவீத சரிவைக் கண்டது.முந்திரி பயன்பாட்டில் இந்தியா, முன்னணியில் உள்ளது.
நம்நாட்டில், ஆண்டுக்கு 1 லட்சத்து 70 ஆயிரம் டன் முதல், 1 லட்சத்து 90 ஆயிரம் வரை முந்திரி பயன்பாடு உள்ளது. கடந்த, சில ஆண்டுகளாக முந்திரிக்கான தேவை அதிகரித்து வந்தது. இந்நிலையில், நடப்பாண்டு, இந்தியாவிலும் முந்திரி பயன்பாடு குறைந்துள்ளது.\
மேற்கு ஆப்ரிக்கா:எனினும், சென்ற ஆண்டு அதிக விலைக்கு முந்திரியை வாங்கி, இருப்பில் வைத்துள்ள வியாபாரிகள், தற்போது, நிலவும் சந்தை விலைக்கு அவற்றை விற்பனை செய்ய ஆர்வமில்லாமல் உள்ளனர். மேற்கு ஆப்ரிக்காவில் இருந்து, இறக்குமதி செய்துள்ள இரண்டாம் ரக முந்திரியை விற்பனை செய்து வருகின்றனர்.அதே சமயம்,வரும் மாதங்களில் முந்திரிக்கான தேவை எப்படியிருக்கும் என்பதை ஊகிக்க முடியாத ஏற்றுமதியாளர்கள், அதிக விலையில் முந்திரி வாங்குவதை தவிர்ப்பதாக இத்துறை வர்த்தகர்கள் தெரிவித்தனர்.
சுணக்க நிலை:இதுகுறித்து, ஏற்றுமதி நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் கூறுகையில்:முந்திரி சந்தை நிலவரம் நிலையில்லாமல் காணப்படுகிறது. எந்த நேரத்தில் முந்திரி விலை வீழ்ச்சி காணும், எந்த சமயத்தில் விலை உயரும், என்பதை உறுதியாக கூற முடியவில்லை. இதன், நீண்ட கால அடிப்படையில், திட்டமிட்டு முந்திரியை கொள்முதல் செய்ய முடியாமல் உள்ளது. தற்போது

இச்சந்தையில் காணப்படும் சுணக்க நிலை, நடப்பாண்டு எஞ்சியுள்ள மாதங்களிலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ரூபாய் மதிப்பின் தொடர் சரிவால்...சமையல் எண்ணெய் விலை அதிகரிப்பு- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து

ஜூன் 24,2012,00:59



சமையல் எண்ணெய் விலை, கடந்த ஒரு வாரத்தில் ஐந்து சதவீதம் உயர்ந்துள்ளது. அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, சர்வதேச பொருளாதார நெருக்கடி, பருவமழை பொய்த்தது உள்ளிட்ட காரணங்களால், சமையல் எண்ணெய் விலை உயர்ந்துள்ளதாக இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர்.

பருவமழை:கடந்த வாரம், அன்னிய செலாவணி வர்த்தகத்தின் இடையே, அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு, 56.70 ஆக புதிய உச்சத்தை தொட்டது. இதனால், பாமாயில் உள்ளிட்ட சமையல் எண்ணெய் வகைகளின் இறக்குமதி செலவு அதிகரித்துள்ளது. இதன் எதிரொலியாக, வேளாண் முன்பேர சந்தையில் சமையல் எண்ணெய் வகைகளின் விலை உயர்ந்துள்ளது. இது, வெளிச்சந்தையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.தற்போது 10 கிலோ, சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் விலை, 601 ரூபாயாக உயர்ந்துள்ளது. 10 கிலோ கடலை எண்ணெய் விலை, 1,190 ஆக அதிகரித்துள்ளது. அது போன்று, சுத்திகரிக்கப்பட்ட கடுகு எண்ணெய் 812 ரூபாயாகவும், பருத்தி எண்ணெய் 715 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

இது, குறித்து இந்திய எண்ணெய் உற்பத்தியாளர்கள், கூட்டமைப்பின் செயல் இயக்குனர் "பீ.வி. மேத்தா' கூறும்போது,"கடந்த சில தினங்களாக பருவமழை பொய்த்துள்ளது. உள்நாடு மற்றும், சர்வதேச சந்தைகளில் சமையல் எண்ணெய் விலை சரிந்து வந்த நிலையில், பருவமழை தள்ளிப் போனதால் அவற்றின் விலை உயரத் தொடங்கியுள்ளது' என்று தெரிவித்தார்.சர்வதேச சந்தை:உள்நாட்டை பொருத்தவரை, ரூபாய் மதிப்பில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியும், சமையல் எண்ணெய் விலை உயர்விற்கு வழிவகுத்துள்ளது. முன்பு, சர்வதேச

சந்தையில் சமையல் எண்ணெய் விலை குறைந்திருந்ததால், ரூபாய் மதிப்பு வீழ்ச்சியின் தாக்கம் பிரதிபலிக்கவில்லை. தற்போது, சர்வதேச சந்தையிலும் சமையல் எண்ணெய் விலை உயர்ந்துள்ளதால், ரூபாய் மதிப்பின் வீழ்ச்சி தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இறக்குமதி :பாமாயில் உள்ளிட்ட முக்கிய சமையல் எண்ணெய் வகைகள், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதால், வர்த்தகர்கள் முன்பை விட மிக அதிக அளவில் டாலர்களை அளிக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாக, உள்நாட்டில் சமையல் எண்ணெய் விலை உயர்ந்துள்ளது என,மேத்தா மேலும் கூறினார்.

நடப்பு 2011-12ம் எண்ணெய் பருவத்தில் (நவம்பர்-அக்.,), சென்ற ஏப்ரல் வரையிலான முதல் அரையாண்டில், நாட்டின் ,சமையல் எண்ணெய் இறக்குமதி 30 சதவீதம் அதிகரித்து,47 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, சென்ற பருவத்தின், இதே காலத்தில் 36 லட்சம் டன்னாக இருந்தது.

அமெரிக்கா:அமெரிக்காவில் சோயா விளைச்சலுக்கான பருவநிலை சரியாக இல்லை. சீனா, எண்ணெய் இறக்குமதியை அதிகரித்துள்ளது. இவற்றுடன், ரம்ஜான் பண்டிகை வர உள்ளதால், சமையல் எண்ணெய் விலை 8-10 சதவீதம் உயர்ந்துள்ளது. என கனோரியா எண்ணெய் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் "சுரேஷ் கனோரியா' தெரிவித்துள்ளார்.நடப்பு ஜூன் மாத தொடக்கம் முதல்,மலேஷியாவின் பாமாயில் விலை, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது. வேளாண் முன்பேர சந்தையில், வரும் செப்டம்பர் மாத விற்பனைக்கான ஒரு டன் பாமாயில் விலை, 3.2 சதவீதம் உயர்ந்து 3,041 ரிங்கிட் (964 டாலர்) ஆக அதிகரித்துள்ளது. கச்சா பாமாயில் விலை 15 சதவீதம் உயர்ந்துள்ளது. அதே சமயம், கடலை எண்ணெய் வரத்து அதிகரித்து, தேவை குறைந்துள்ளதால்அதன் விலை சரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த 15-20 தினங்களில் 15 கிலோ கடலை எண்ணெய் விலை 1,950 ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர். குஜராத் சந்தைகளில், நாள்தோறும் 75 ஆயிரம் மூட்டை கடலை வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆமணக்கு எண்ணெய்:கடந்த இரு வாரங்களில், சமையல் சாராத, இதர எண்ணெய் பிரிவில், 10 கிலோ ஆமணக்கு எண்ணெய் விலை 100 ரூபாய் உயர்ந்து 680-685 ரூபாயாக அதிகரித்துள்ளது. தொழிற்சாலைகள் மற்றும் ஜவுளி ஆலைகளுக்கான தேவை உயர்ந்துள்ளதால், ஆமணக்கு எண்ணெய் விலை அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.விளைபொருள் முன்பேர சந்தையில், கடந்த 8-10 நாட்களாக தின வர்த்தகத்தில் சமையல் எண்ணெய் வகைகளின் விலை உயர்ந்து வருகிறது. உள்நாடு மற்றும் வெளிநாட்டு தேவை அதிகரிக்கும் என்பதால், மேலும் விலை உயர வாய்ப்புள்ளதாக "ராஜ்கோட் கமாடிட்டி எக்ஸ்சேஞ்ச் நிறுவனத்தின் தலைவர் ராஜூபாய் பொபாரு' தெரிவித்துள்ளார்.

## நாட்டின் பொருளாதாரத்தை ஊக்குவிக்க புதிய திட்டம்: நாளை அறிவிக்கப்படும் - பிரணாப் தகவல்

ஜூன் 24,2012,00:57



கோல்கட்டா:நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், புதிய கொள்கை திட்டங்கள், நாளை அறிவிக்கப்படும் என, மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.
பணவீக்கம்:அவர் மேலும் கூறியதாவது:சர்வதேச நிலவரங்களால், இந்திய பொருளாதார வளர்ச்சி பாதிப்புக்குள்ளாகியுள்ளது. குறிப்பாக, பணவீக்க அதிகரிப்பும், டாலருக்கு எதிரான ரூபாய் வெளிமதிப்பு சரிவும், பொருளாதார வளர்ச்சிக்கு தடைக்கற்களாக உள்ளன.உலகின் பல்வேறு நாடுகளுடன் ஒப்பிடும் போது, இந்தியாவின் அடிப்படை அம்சங்கள் சிறப்பாகவே உள்ளன. வெளிநாட்டு நிலவரங்களால், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது.
கடந்த ஓராண்டு காலத்தில், அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் வெளிமதிப்பு 20 சதவீதம் சரிவடைந்துள்ளது. குறிப்பாக, ரூபாயின் வெளிமதிப்பு 57 ரூபாய்க்கும் அதிகமாக குறைந்துள்ளது. இது, கச்சா எண்ணெய் இறக்குமதி செலவினத்தை உயர்த்துவதாக உள்ளது.நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.5 சதவீதமாக உள்ளது. சென்ற ஏப்ரல் மாதத்தில், நாட்டின் தொழில்துறை உற்பத்தி வளர்ச்சி, 0.1 சதவீதமாக குறைந்துள்ளது.
பல்வேறு காரணங்களால், பங்குச் சந்தை நிலவரமும், மந்த கதியில் உள்ளது.இருப்பினும், நடப்பாண்டு ஜனவரி முதல் ஜூன் 6ம் தேதி வரையிலுமாக, அன்னிய நிதி நிறுவனங்களின் முதலீடு, 800 கோடி டாலராக அதிகரித்துள்ளது. அதேசமயம், கடந்த 2011ம் ஆண்டில், இந்நிறுவனங்களின் முதலீடு எதிர்மறை வளர்ச்சியை கண்டிருந்தது. இதே காலத்தில், அன்னிய நேரடி முதலீடு 4,600-4,800 கோடி டாலராக உள்ளது. இது, கடந்த ஆண்டை விட அதிகமாகும்.
புதிய திட்டம்:நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், நாளை, புதிய கொள்கை திட்டங்கள் அறிவிக்கப்பட உள்ளன. பொருளாதார விவகாரங்கள் துறையின் செயலர் ஆர்.கோபாலன், சென்ற வெள்ளியன்று, ரிசர்வ் வங்கி கவர்னர் டீ.சுப்பாராவுடன் ஆலோசனை

மேற்கொண்டார். மத்திய அரசு, ரிசர்வ் வங்கியுடன் இணைந்து, பொருளாதார வளர்ச்சி மற்றும் சந்தை நிலவரங்களை மேம்படுத்தும் வகையில், மேம்பாட்டு திட்டங்களை அறிவிக்கவுள்ளது. இவ்வாறு பிரணாப் முகர்ஜி கூறினார்.

## அழிவின் விளிம்பில் பேரிக்காய் விவசாயம் : மவுசு குறைவால் ஆர்வமில்லா விவசாயிகள்

பதிவு செய்த நாள் : ஜூன் 25,2012,02:31 IST

சேலம்: ஏழைகளின், "ஆப்பிள்' என்ற சிறப்பு பெயருடன் உலா வந்த பேரிக்காய் விளைச்சல், ஆண்டு தோறும் சரிந்து கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் ஊட்டி, ஏற்காடு உள்ளிட்ட மலை பிரதேசங்களில் பேரிக்காய் விளைவிக்கப்படுகிறது. சேலம் மாவட்டத்தில், ஏற்காட்டில் பேரிக்காய் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. மக்களிடம் போதுமான வரவேற்பு இல்லாததால், பேரிக்காய் சாகுபடி ஆண்டு தோறும் குறைந்து வருகிறது.

ஏற்காடு மஞ்சக்குட்டை பகுதியில் மட்டுமே, 150 ஏக்கரில் பேரிக்காய் மரம் பயிரிடப்பட்டுள்ளது. பேரிக்காய் மரம் நன்றாக வளர்வதற்கான தட்பவெப்ப நிலை ஏற்காட்டில் உள்ளதால், ஒரு பேரிக்காய், 300 கிராம் எடை வரை விளைகிறது. 20 ஆண்டுக்கு முன், ஏற்காட்டில் மட்டும், 50 முதல் 100 டன் எடை பேரிக்காய் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது, வெறும் ஐந்து டன் வரையிலான பேரிக்காய் மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு கூடை காய், 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

ஏற்காட்டில் பேரிக்காய் விளைவிப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டாத நிலையில், காட்டெருமை, குரங்குகள் போன்றவையும் சேதத்தை ஏற்படுத்தி, விளைச்சல் குறைவுக்கு காரணமாகின்றன.

மருத்துவ குணம் கொண்ட பேரிக்காயில், வைட்டமின் சத்துக்கள் நிறைந்துள்ளது. குழந்தைகளின் வளர்ச்சிக்கு தேவையான சுண்ணாம்பு சத்து மற்றும் இரும்பு சத்து பேரிக்காயில் மிகுதியாக உள்ளது. உடல் ஆரோக்கியத்துக்கு உகந்த பேரிக்காய் விளைச்சல் குறைந்து வருவதை தவிர்க்க, மாவட்ட நிர்வாகமும், தோட்டக்கலை மற்றும் வேளாண்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏற்காடு தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பாஸ்கரன் கூறியதாவது: ஏற்காடு மலைப்பகுதியில் விவசாயிகள் பேரிக்காய் மரங்களை வளர்த்து வருகின்றனர். ஊட்டி பகுதியில் விளைவிக்கப்படும் பேரிக்காய் "வால்பேரி' வகையை சார்ந்தது. ஏற்காட்டில் விளையும் பேரிக்காய் சளி பிடித்து விடும் என்பதால், மக்களிடம் வாங்கும் ஆர்வம் குறைந்து விட்டது. எனவே,

ஏற்காட்டிலும், "வால்பேரி' பயிரிட அரசு மூலம் புதிய திட்டத்துக்கு பரிந்துரை செய்வதன் மூலம், இங்கு பேரிக்காய் மரங்கள் அதிகளவு பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்ட வாய்ப்புள்ளது.

## சொட்டுநீர் பாசன திட்டத்தில் முறைகேடு

பதிவு செய்த நாள் : ஜூன் 25,2012,02:19 IST

*நா*மக்கல்: "தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் சொட்டு நீர் பாசன திட்டத்தில் நடந்துள்ள முறைகேடு குறித்து, மாவட்ட நிர்வாகம் தீவிர விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, கோரிக்கை எழுந்துள்ளது.

தோட்டக்கலை துறை மூலம், நாமக்கல் மாவட்டம் முழுவதும் சொட்டு நீர் பாசனத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதற்காக, மானியத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, மல்லசமுத்திரம் யூனியன் பகுதியில் இத்திட்டத்தின் கீழ் சொட்டுநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது. அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில், முறைகேடு செய்யப்பட்டுள்ளதாவும், 90 சதவீதம் விவசாயிகளுக்கு சொட்டு நீர் குழாய் அமைக்கவில்லை என்பதும், ஆனால், செலவிடப்பட்டதாக கணக்கு காட்டி மானியத்தொகையை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் சுருட்டிக்கொண்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மேலும், எலச்சிபாளையம் யூனியனில், 2010-11ம் ஆண்டில் சொட்டுநீர் பாசனம் அமைத்ததில் ஒரே விவசாயிக்கு இரண்டு முறை விண்ணப்பம் பெற்று சொட்டுநீர் பாசனம் அமைத்ததாகவும், அவர்களுக்கு பயிருக்கான மானியமும் வழங்கப்பட்டதாகவும் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது. எலச்சிபாளையம் யூனியனில், மொத்தம் உள்ள விளை நிலங்கள் எவ்வளவோ அதைவிடவும் கூடுதல் பரப்புக்கு சொட்டுநீர் பாசன திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில், தோட்டக்கலை துணை இயக்குனரால் வழங்கப்பட்ட காசோலைகள் காலாவதியானது.

அவற்றை, எலச்சிபாளையம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனரால் உரிய விவசாயிகளை கண்டறிந்து ஒப்படைக்க முடியவில்லை. காரணம், அப்படி ஒரு விவசாயிக்கு சொட்டுநீர் பாசனம் அமைத்துத்தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான புகார்கள் குறித்து, மாவட்ட கலெக்டர் நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை.

"நாமக்கல் மாவட்டத்தில் உள்ள, 15 யூனியன்களில் எவ்வளவு கோடி ரூபாய் முறைகேடு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து, மாவட்ட நிர்வாகம் உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும்' என, கோரிக்கை எழுந்துள்ளது.

## கொடைக்கானல் பேரிக்காய் நாமக்கல்லில் குவிகிறது

பதிவு செய்த நாள் : ஜூன் 25,2012,02:14 IST

நாமக்கல்: கொடைக்கானல் பேரிக்காய், நாமக்கல் பகுதியில் விற்பனைக்கு குவிக்கப்பட்டுள்ளது. ஏழைகளின் ஆப்பிள் எனப்படும் பேரிக்காய் சீஸன், மே மாத இறுதியில் துவங்கி ஆகஸ்ட் மாதம் வரை நீடிக்கும். கொடைக்கானலில் பேரிக்காய் சீஸன் துவங்கியுள்ளது. அங்கு விளைவிக்கப்படும் பேரிக்காய், மாநிலம் முழுவதும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. நாமக்கல்லிலும் கொடைக்கானல் பேரிக்காய் விற்பனைக்கு வந்துள்ளது.

ஒரு கிலோ பேரிக்காய், 150 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. விலை அதிகம் என்ற போதிலும், குளிர்ச்சி மற்றும் நீர்சத்து நிறைந்தது என்பதால், மக்கள் விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

பேரிக்காய் விற்பனையாளர் கூறுகையில், ""பேரிக்காய் சீஸன் மூன்று மாதம் வரை சீஸன் நீடிக்கும். சீஸன் துவக்கம் என்பதால், விலை கூடுதலாக உள்ளது. வரும் வாரங்களில் விலை குறைய வாய்ப்புள்ளது,"என்றார்.

.

## மலைப்பயிர் சாகுபடி : விவசாயிகளுக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூன் 25,2012,02:09 IST

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை, அட்மா திட்டம் சார்பில், நாமகிரிப்பேட்டை வட்டாரத்துக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு, ஏற்காடு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில், மலைப்பயிர் சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

ஆராய்ச்சி நிலைய துணை பேராசிரியர் கிருஷ்ணவேணி தலைமை வகித்தார். இணை பேராசிரியர் குமரேசன் வரவேற்றார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சந்திரசேகரன், தொழில்நுட்ப வல்லுநர்கள் தீபா, திவ்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து, மலைப்பயிர் சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும், கால்நடை பராமரிப்பு துறை சார்பில், கால்நடை மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில், 25 பண்ணை மகளிர் விவசாயிகளுக்கு பாலாடைக் கட்டி, கேரட்பால், ஐஸ்கீரிம், மசாலா மோர், பால்கோவா மற்றும் பாலின் மூலம் செய்யக்கூடிய பொருள்கள் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

அட்மா திட்ட உறுப்பினர்கள் உட்பட்ட, 80க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

## விவசாயத்துக்கு மும்முனை மின்சாரம் : கலெக்டரிடம் விவசாயிகள் கோரிக்கை

பதிவு செய்த நாள் : ஜூன் 25,2012,01:50 IST

தஞ்சாவூர்: "தமிழகத்தில் காவி ரி டெல்டா பாசன விவசாயத்துக்கு தமிழக முதல்வர் அறிவித்தபடி தினமும் 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, திருவையாறு பகுதி விவசாயிகள் தஞ்சை கலெக்டர் பாஸ்கரனிடம் மனு கொடுத்தனர்.
மேட்டூர் அணையிலிருந்து ஜ ூன் 12ம் தேதி வழக்கமாக காவி ரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும். ஆனால், தற்போது கர்நாடகம் தண்ணீர் தர மறுப்பதாலும், மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இருப்பு இல்லாததாலும், மழை இல்லாததாலும் தண்ணீர் உரிய தேதியில் திறக்கப்படவில்லை.
இந்நிலையில், மாற்று நடவடிக்கையாக குறுவை சாகுபடிக்கு டெல்டா பாசன மாவட்டங்களில் தினமும் 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என, தமிழக முதல்வர் அறிவித்தார். ஆனால், முதல்வர் அறிவித்தபடி மின்சாரம் வழங்கப்படுவதில்லை என, தஞ்சை கலெக்டர் பாஸ்கரனிடம் திருவையாறு விவசாயிகள் சங்கம் சார்பில் அய்யாரப்பன் தலைமையில் விவசாயிகள் புகார் தெரிவித்து மனு கொடுத்தனர்.
அம்மனுவில் கூறியிருப்பதாவது:
தமிழக முதல்வர், விவசாயத்துக்கு தினமும் 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கும் புதிய திட்டத்தை அறிவித்தார். ஆனால், திருவையாறு துணை மின்நிலைய பகுதிகளான ஆச்சனூர் மற்றும் விளாங்குடி மின் பாதையில் தினமும் மூன்று மணி நேரம் மட்டுமே விவசாயத்துக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆகையால் இனிமேலாவது முதல்வர் அறிவித்தபடி, இப்பகுதி விவசாயிகள் கோரிக்கைகளை ஏற்று, தினமும் 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## கொப்பரை கொள்முதல் கலந்தாய்வு கூட்டம்

பதிவு செய்த நாள் : ஜூன் 25,2012,01:49 IST

தஞ்சாவூர்: கொப்பரை கொள்முதல் தொடர்பான பிரச்னை குறித்த அலுவலர்கள் கலந்தாய்வு கூட்டம் கலெக்டர் பாஸ்கரன் தலைமையில் நடந்தது.
அப்போது அவர் பேசியதாவது:
பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி ஆகிய இரு கொப்பரை கொள்முதல் செய்யும் மையங்களிலும் பட்டுக்கோட்டை வேளாண்மை உற்பத்தி கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலம்

வாரத்தில் திங்கள் முதல் வியாழன் வரை நான்கு நாட்களும் ஒரே நேரத்தில் கொள்முதல் செய்ய ஜுன் 25ம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்படும். கொப்பரை அளித்த விவசாயிகளுக்கு உடனடியாக பணப்பட்டுவாடா செய்ய நாபெட் நிறுவனத்தில் இருந்து உடனுக்குடன் பணம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கொள்முதல் தடையில்லாமல் நடக்க சேமிப்பு கிடங்குகளில் போதிய இடத்தை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
ஒரத்தநாட்டை மையமாக கொண்டு கொப்பரை கொள்முதல் செய்வதுக்கு டான்பெட் நிறுவன தலைமை அலுவலகத்தில் இருந்து உத்தரவு கிடைக்கப் பெற்றதும் இப்பகுதி கொப்பரை உற்பத்திக்கு ஏற்ப கொள்முதல் செய்யப்படும்.

## கொப்பரை கொள்முதல் நிலையம் தேவை

பதிவு செய்த நாள் : ஜூன் 24,2012,21:28 IST

ராமநாதபுரம்:கொப்பரை கொள்முதல் நிலையத்தை மீண்டும் துவங்க வேண்டும் என தென்னை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.ராமநாதபுரம் மாவட்ட தென்னை விவசாயிகள் சங்க தலைவர் செல்லத்துரை அப்துல்லா கூறியதாவது:இம்மாவட்டத்தில் 25,000 ஏக்கரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அரசு கூறியதுபோல் ஒரு மரத்திற்கு யூரியா, பொட்டாஷ், சூப்பர் பாஸ்பேட் உள்ளிட்ட உரங்கள் இடுவதற்கு ரூ. 100 வரை செலவாகிறது. விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்யும் வகையில் பொள்ளாச்சி உள்ளிட்ட சில இடங்களில் கொப்பரை கொள்முதல் நிலையம் துவங்கப்பட்டது.

இதன் மூலம் விவசாயிகளிடம் ரூ. 51 (ஒரு கிலோ) கொள்முதல் செய்யப்பட்டது. இதற்கிடையில் இந்த கொள்முதல் நிலையம் செயல்படாமல் முடங்கியுள்ளது. இதனால், விவசாயிகள் வெளி மார்கெட்டில் கிலோ ரூ. 31க்கு விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வெளிநாடுகளில் இருந்து பல்வேறு ஆயில்களை நேரடியாக இறக்குமதி செய்வதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. ஆண்டுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 35 ஆயிரம் செலவாகிறது. ஆனால், ரூ.10,000 மட்டுமே வருமானம் கிடைக்கிறது. 400 ரூபாய்க்கு விற்ற உரங்கள், தற்போது 1,600 ரூபாய் (50 கிலோ மூடை) வரை விலை அதிகரித்துள்ளது. தனியார் ஆதிக்கத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதால் தேங்காய் விலை உயராமல் உள்ளது. இதனால் அரசே நேரடியாக கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும். மானிய விலையில் உரம் வழங்க வேண்டும். மற்ற பயிர்களை போல் தென்னைக்கு பயிர் காப்பீடு திட்டம் வழங்க வேண்டும், என்றார்.

## மிளகாய் சாகுபடி: விவசாயிகளுக்கு இழப்பீடு

பதிவு செய்த நாள் : ஜூன் 24,2012,21:37 IST

சிவகங்கை:""இளையான்குடியில் கடந்த ஆண்டு (2010-2011) மிளகாய் சாகுபடியில் ஏற்பட்ட பாதிப்பிற்காக விவசாயிகளுக்கு ரூ.2.80 கோடி இழப்பீடு வழங்கப்பட்டு வருவதாக," தோட்டக்கலை துணை இயக்குனர் இருளப்பன் தெரிவித்தார். அவர் கூறியதாவது:மாவட்டத்தில் சராசரியாக ஆண்டிற்கு 5ஆயிரம் எக்டேரில் மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது.
கடந்த ஆண்டு (2010- 2011) ராபி பருவத்தில் மிளகாய் சாகுபடி செய்து இன்சூரன்ஸ் செய்த இளையான்குடியை சேர்ந்த 5,519 விவசாயிகளுக்கு இழப்பீடாக வழங்க ரூ.2.80 கோடி வந்துள்ளது. விவசாயிகள் இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்திய வங்கிகளில் விவசாயிகள் பெயரில் வரவு வைக்கப்படும். ராபி பருவத்தில் மிளகாய் நடவு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகள், அந்தந்த வங்கிகளில் வரவான இழப்பீடு தொகை விபரங்களை கேட்டு தெரிந்து கொள்ளலாம், என்றார்.

## நாவல்பழம் சீசன் துவக்கம்

பதிவு செய்த நாள் : ஜூன் 24,2012,01:31 IST

புதுக்கடை: உற்பத்தி குறைந்ததால் மருத்துவ குணம் மிகுந்த நாவல்பழம் விலை உயர்ந்துள்ளது. பழங்களில் அதிக மருத்துவ குணம் நிறைந்தது நாவல்பழம். சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு இந்த பழம் மருத்துவர்களால் பரிந்துரை செய்யப்படுகிறது. புராண காலம் முதல் சுட்டப்பழம் என புகழ்பெற்ற நாவல்பழங்கள் ஜூன், ஜூலை மாதங்களில் அதிகளவு உற்பத்தியாகி விற்பனைக்கு வரும்.
தற்போது போதிய விளைச்சல் இல்லாததால் சீசன் துவங்கியும் குறைந்த அளவில் நாவல் பழங்களே உற்பத்தியாகி விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளன. முதல்ரக நாவல்பழம் கிலோ ஒன்றிற்கு 240 ரூபாய்க்கும், அடுத்த ரகம் 160 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.
இது குறித்து பழ வியாபாரிகள் கூறுகையில், கடந்த ஆண்டு 200 ரூபாய்க்கு விற்கப்பட்ட முதல்ரக நாவல்பழம் தற்போது 40 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. விலைவாசி உயர்வு மற்றும் உற்பத்தி குறைவால் இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. மேலும் இந்த ஆண்டு நாவல்பழ சீசன் நீண்ட நாட்கள் நீடிக்க வாய்ப்பில்லை என கூறினர்.

---